2013 அக்டோபர் 24]

திரு. க. பாண்டியராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் முனைப்புமிக்க பட்டியலின மக்கள் வாழும் மாவட்டம் விருதுநகர். இந்த விருதுநகர் மாவட்டத்தில் அமெரிக்காவின்* Carter Center *போல் வடிவமைத்து, நமது தாழ்த்தப்பட்ட சமுதாய படித்த இளைஞர்களுக்காக தொழில் முனைவோர் பயிற்சி மையம்* E.D.C. *விருதுநகரில் அமைக்கப்பட்டால் பாரதத்தில் முதல் முறையாக மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக அமையும். தாழ்த்தப்பட்ட படித்த இளைஞர்களுக்கென தாட்கோ மூலமாக விருதுநகரில் தொழில் முனைவோர் பயிற்சி மையம், அமைக்கப்படுமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லையென்பதால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வியாக போடும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

14—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

***32169—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளத்தில் பகுதிநேர வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்க விரும்புகிறேன்.*

ஆலங்குளம் தாலுகாவில் 2,245 போக்குவரத்து வாகனங்களும், 34,825 போக்குவரத்து அல்லாத வாகனங்களும் மட்டுமே உள்ளன. இப்பகுதி மக்கள் ஓட்டுனர் உரிமம், புதிய வாகனங்கள் பதிவு ஆகிய சேவைகளைப் பெற அருகில் உள்ள தென்காசி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். ஆலங்குளத்தில் தற்போது உள்ள வாகனங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் வட்டாரப் போக்குவரத்துப் பகுதி அலுவலகம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை. வரும் ஆண்டுகளில் வாகனங்களின் எண்ணிக்கைக்கேற்ப, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று, வட்டாரப் போக்குவரத்துப் பகுதி அலுவலகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. பி.ஜி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றிலே எத்தனையோ முதல்வர்களை கண்டது நமது தமிழ்நாடு. ஆனால், தினம் தினம் கோடி கோடியாக, கோடிக்கணக்கில் திட்டங்களை அள்ளித் தந்த நம் மாண்புமிகு முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களைப்போல் நம் தமிழகம் கண்டதும் இல்லை, இனி காணப்போவதும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) நேற்றையதினம்கூட சென்னைப் பெருநகர மக்களுக்கு இதுவரை எந்த முதல்வரும் செய்யாத சாதனையாக, 50 சிற்றுந்துகளைத் துவக்கி வைத்து, ஏழையெளிய மாணவ, மாணவிகளுக்கு பள்ளி, கல்லூரி செல்ல போக்குவரத்து வசதி செய்து தந்த தாயே! தமிழகம் எங்கும் 610 புதிய பேருந்துகளைத் துவக்கி வைத்ததோடு மட்டுமின்றி (மேசையைத் தட்டும் ஒலி) போக்குவரத்துத் தொழிலாளர்கள் வாழ்வில் அவர்கள் ஓய்வு பெற்ற பின்பும் ஓய்ந்து போகாமல் இருக்க ரூபாய் 257 கோடிக்கு பணப் பயன்கள் வழங்கிய தொழிலாளர்களின் ஒளிவிளக்கே, எங்கள் அம்மாவே (மேசையைத் தட்டும் ஒலி) ஆலங்குளம் தொகுதிக்குப் புதிய போக்குவரத்துப் பணிமனை அமைத்துக் கொடுத்ததற்கு தங்கள் பொற்பாதம் வணங்குகிறேன்.

2013 அக்டோபர் 24]

ஆலங்குளம், கடையம், ஊத்துமலை, முக்கூடல் பகுதி மக்கள் தென்காசி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் செல்வதால் ஏற்படும் காலதாமதத்தினைத் தவிர்க்க ஆலங்குளத்தில் பகுதிநேர வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்த அலுவலகங்களின் வாகனங்களுடைய எண்ணிக்கை உயர்வுகளுக்கேற்ப மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த இரண்டே ஆண்டுகளில் 6 புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களை வழங்கியும் (மேசையைத் தட்டும் ஒலி) 5 வட்டாரப் போக்குவரத்துப் பகுதி அலுவலகங்களை, வழங்கியும் வட்டாரப் போக்குவரத்துப் அலுவலகங்களாகத் தரமுயர்த்தியும், 18 புதிய பகுதி அலுவலகங்களை வழங்கியும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். ஆலங்குளம் பகுதியில் வாகனங்களுடைய எண்ணிக்கைக்கேற்ப, வரும் ஆண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. பி.ஜி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் நிதியாண்டில் பரிசீலிக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*